ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ : Registration No. :											

V1 – 2026

ವಿಷಯ ಸಂಕೇತ / Subject Code	**04 (NS)**

ತಮಿಳು / TAMIL

[ಸಮಯ: 3 ಗಂಟೆಗಳು] [ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 57] [ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80]

[Time : 3 Hours] [Total No. of questions : 57] [Max. Marks : 80]

மாணவர்களின் கவனத்திற்கு :

1. கையெழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களைச் சரியாக குறிப்பிட வேண்டும்.
3. கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.

பகுதி – 1

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

(10 × 1 = 10)

1) நாரை துழாவித் தின்றது

அ) கெளிற்று மீனை ஆ) நண்டு

இ) தவளை ஈ) மண்புழு

2) தம்மிடம் செல்வம் இல்லாத போதும் மனம் தளராதவர்

அ) அன்புடையார் ஆ) நிலமுடையார்

இ) குணமுடையார் ஈ) ஒப்புரவாளர்

3) ஆயிரம், ஆயிரம் அலை நாக்குகளுடன் மனிதனின் காலில் கிடப்பது

அ) பேரலை ஆ) கடல் அலை

இ) மணல் ஈ) மழை

4) கண்ணில் படும் பொருள்கள் அனைத்திலும் கருப் பொருளாக இருப்பவன்

அ) பேரரசன் ஆ) இளங்குமரன்

இ) நபிகள் நாயகம் ஈ) சிற்றரசன்

5) தந்தை பெரியார் பிறந்த ஆண்டு

அ) கி.பி. 1879 ஆ) கி.பி. 1917

இ) கி.பி. 1924 ஈ) கி.பி. 1927

6) "ஷேக்ஸ்பியர் நினைவுக்குக் காணிக்கை" என்ற கட்டுரையின் ஆசிரியர்

அ) ஜான்சன் ஆ) கென்னடி

இ) திருவள்ளுவர் ஈ) பென் ஜான்சன்

7) தில்லைவனத்தின் இக்காலப் பெயர்

அ) ஆலங்குடி ஆ) சிதம்பரம்

இ) தாம்பரம் ஈ) மதுரை

8) சிற்பி சாத்தன் வடித்திருந்த சிலை

அ) முருகன் ஆ) திருமால்

இ) பிரம்மன் ஈ) நடராஜ பெருமான்

9) வைரவன் செட்டியார் விஷமென நினைத்து உண்டது

அ) வெள்ளி பஸ்பம் ஆ) பவள பஸ்பம்

இ) வைடூரிய பஸ்பம் ஈ) மாணிக்க பஸ்பம்

10) "மஞ்சனாத்தி மலை" சிறுகதையில் மிளகுக் காடு இருக்கும் இடம்

அ) கேரளா ஆ) தமிழ்நாடு

இ) கர்நாடகம் ஈ) ஆந்திரா

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : **(5 × 1 = 5)**

11) ஞாலத்தில் மூத்தவள் _____ . [தாய்/தமிழ்த்தாய்]

12) தழைத்த வாழைத் தளிரிலை தன்னில் _____ படைத்த பண்டம் உண்டனர். [பழத்தோடு/காய்களோடு]

13) ஒலியின் அளவை _____ என்ற அளவுகோலினால் அளந்தனர். [மெகாபெல்/டெசிபல்]

14) வெண்பாவிற்குரிய இராகம் _____. [சங்கரா பரணம்/கலியாணி]

15) யோஷிகி சென்னைக்கு வந்தபொழுது _____ வீட்டில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். [சிவமூர்த்தி/குருமூர்த்தி]

III. பொருத்துக : **(5 × 1 = 5)**

16) வைததனால் ஆகும்	அ) ஜெயகாந்தன்
17) தமிழிசைச் சங்கம்	ஆ) விந்தன்
18) தண்ணீரைத் தேக்கி வைக்கும் நிலையம்	இ) வசை
19) கும்பாபிசேகம்	ஈ) அண்ணாமலைச் செட்டியார்
20) சுயநலம்	உ) ஏரி
	ஊ) குடமுழுக்கு

பகுதி – 2

பிரிவு – 1

அ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு **2** அல்லது **3** வரிகளில் விடை எழுதுக. **(2 × 2 = 4)**

21) நாம் எதைப் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும் என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்?

22) மணிமேகலை குறிப்பிடும் பாரமிதை என்பதன் பத்து வகைகள் யாவை?

23) மரத்திற்கும், பூமித்தாய்க்கும் உள்ள உறவைக் கவிஞர் எவ்வாறு சித்தரிக்கின்றார்?

பிரிவு – 2

ஆ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு **2 அல்லது 3** வரிகளில் விடை எழுதுக. **(2 × 2 = 4)**

24) சாவைப் பார்த்து ஷெல்லி கூறியது யாது?

25) சாலையின் இரைச்சலைக் குறைப்பதற்கான ஏதாவது இரண்டு யோசனைகளை எழுதுக.

26) பசவண்ணரின் பக்தி இயக்கத்தில் பங்காற்றிய வசனகாரர்களைக் குறிப்பிடுக.

பிரிவு – 3

இ) ஏதேனும் **ஒரு** வினாவிற்கு **2** அல்லது **3** வரிகளில் விடை எழுதுக. **(1 × 2 = 2)**

27) சரசு தன் கணவனிடம் எதிர்பார்த்த கரிசனங்களை எழுதுக.

28) ஜேம்ஸைச் சுற்றி எப்போதும் நண்பர்கள் இருப்பதற்குக் காரணம் என்ன?

பகுதி – 3

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(3 × 3 = 9)**

29) "எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணியும் எட்ட வில்லை."

30) "கருணைக் கடலே அக்கடலில்
கலந்த அமுதே."

31) பார்சிகளின் விடுதியில் இருந்தும் வெளியேற்றப்பட்டார்.

32) சமூகத்தில் புதியதோர் தாக்கத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கியது.

33) "அழுது மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது."

34) "அடியும் பட்டு, பட்டினியும் கிடந்து சாகணுமா நான்!".

பகுதி – 4

பிரிவு – 1

அ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு **5** அல்லது **6** வரிகளில் விடை எழுதுக. **(2 × 4 = 8)**

35) வெண்ணிக் குயத்தியார், வெண்ணிப் பறந்தலைப் போரைப் பாடும் பாங்கினைப் புலப்படுத்துக.

36) ஊக்கமுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழி நின்று விளக்குக.

37) முக்கூடற் பள்ளுவில் கூறப்படும் சித்ரா நதி எவ்வாறு பாய்ந்து வருகின்றது என்பதையும் அதில் காணப்படும் மீன் வகைகளையும் விவரி.

38) 'பழைய வீடு' என்ற கவிதையில் கவிஞர் அப்துல் ரகுமான் கூறும் கருத்துக்களை எழுதுக.

பிரிவு – 2

ஆ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு **5** அல்லது **6** வரிகளில் விடை எழுதுக. **(2 × 4 = 8)**

39) இஸபெல்லா கனவு கண்டபின் அவளது அன்றாட பழக்கங்கள் எவ்வாறு இருந்தன என்பதை விவரி.

40) வெளிநாட்டுப் புலவர்கள் திருக்குறளைப் போற்றும் முறையை ஜீவாவின் வழிநின்று விளக்குக.

41) பக்தி இயக்கங்கள் செய்த மகத்துவமான சமூகப் பணிகளைப் பற்றி எழுதுக.

42) 'உயர்ந்த ரகம்' நாடகத்தில் திரையரங்கில் நடந்த உரையாடலை விவரி.

பிரிவு – 3

இ) ஏதேனும் **ஒரு** வினாவிற்கு **5** அல்லது **6** வரிகளில் விடை எழுதுக. **(1 × 4 = 4)**

43) வேலப்பன் தன் வேலை நீக்கத்தை முதலாளி மாதவராயர் இடம் புகார் செய்த பிறகு நிகழ்ந்தவற்றை எழுதுக.

44) சரசுவின் காலை நேரப் பணிகளைப் பற்றி எழுதுக.

45) யார் யாருடைய பாவங்களையெல்லாம் மன்னிக்க வேண்டும் என்று பண்ணக்காரன் கங்கையிடம் எவ்வாறு வேண்டிக் கொண்டான்?

பகுதி – 5

பிரிவு – 1

அ) ஏதேனும் **ஒன்றனுக்கு** பாடலின் பொருளை உணர்ந்து அணியை விளக்குக. **(1 × 4 = 4)**

46) உம்ப ரில்வழி இம்பரிற் பல்பிறப்பு
யாங்கணும் இருவினை உய்த்து, உமைப்போல
நீங்களும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்ததும் இறந்ததும் உழல்வோம்.

47) "நீத்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்த தன் கோயிலே எய்துவாளெனப்
பாய்ந்தனள்."

பிரிவு – 2

ஆ) எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. **(4 × 2 = 8)**

48) சேர்த்து எழுதுக.

அ) பெறல் + அரிது

ஆ) அஃது + இல்லா

49) பிரித்து எழுதுக.

அ) ஆங்கவன்

ஆ) அறக்கதிர்

50) எதிர்ச்சொல் தருக.

அ) மாதர் ×

ஆ) போர் ×

51) இலக்கணக் குறிப்பு தருக.

அ) கருணைக் கடல்

ஆ) இளமயில்

52) கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக.

அ) இந்த சிட்டியில் மால்ஸ் சூப்பரா இருக்குது.

ஆ) டமில் க்ளாஸ் வெரி இன்டெஸ்டிங்கா இருந்தது.

53) கீழ்வரும் சொற்களின் பொருளை உணர்ந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

அ) விண்ணுக்கும் மண்ணுக்கும்

ஆ) அண்டம்

பகுதி – 6

பிரிவு – 1

அ) கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றிற்கு** கட்டுரை வடிவில் விடை எழுதுக. **(1 × 5 = 5)**

54) உனக்கு பிடித்த சமூகத் தலைவர்.

55) கணிப்பொறியின் நன்மைகள்.

பிரிவு – 2

ஆ) கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை எழுதுக. **(1 × 4 = 4)**

56) மழையினால் மின் கசிவு ஏற்பட்டு இருப்பதை குறித்து உரிய அதிகாரிக்கு கடிதம் வரைக.

57) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆங்கில பழமொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக.

1) Slow and steady wins the race.
2) The face is the index of the mind.
3) Failure is the stepping stone to success.
4) Empty vessels makes much noise.